ஸ்ரீ

ஸ்ரீமத்யை கோதாயை நம:

தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலையத் துறை



## அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில்,

ஸ்ரீவில்லிபுத்தூர் - விருதுநகர் மாவட்டம்.

# திருக்கல்யாணத் திருவிழா அழைப்பிதழ்

பங்குனி மாதம் 02-ம்தேதி (15.03.2016) முதல் பங்குனி மாதம் 14-ம் தேதி (27.03.2016) வரை



**23.03.2016 புதன்கிழமை** காலை 7 மணிக்கு செப்புத்தேரோட்டம் (கோரதம்)

இரவு 6.30 மணி முதல் 7.20 மணிக்குள் **ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்**



தங்க விமானத்தில் ஸ்ரீஆண்டாள்

ஸ்ரீ:

ஸ்ரீமத்யை கோதாயை நம:

ஸ்ரீதேவி பூமிதேவி ஸமேத
ஸ்ரீவடமஹாதாம ஸ்வாமிநே நம:

ஸ்ரீ விஷ்ணு சித்த ஸ்வாமினே நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:



## அருள்மிகு நாச்சியார்(ஸ்ரீஆண்டாள்) திருக்கோயில்
## திருக்கல்யாணத் திருவிழா அழைப்பிதழ் 2016

ஸ்ரிய: பதியான பகவான் ஸ்ரீவடபத்ரசாமி என்கிற திருநாமத்துடன் சயனத் திருக்கோலத்தில் உகந்து எழுந்தருளியுள்ள திருத்தலம் ஸ்ரீவில்லிபுத்தூர் திவ்ய தேசம். இத்தலத்தில் ஸ்ரீபெரியாழ்வாரின் திருமகளாய், பூமிப் பிராட்டியாய் **ஸ்ரீஆண்டாள்** அவதரித்தார். அவர் தம் தந்தையைப் போலவே வடபெருங்கோயிலுடையானிடம் ஆழ்ந்த பக்தியுடையவராய் திகழ்ந்தார். "**திருப்பாவை**" என்னும் பாமாலையும், பூமாலையும் சூடிக் கொடுத்தார். ஒரு நூற்று நாற்பத்து மூன்று பாசுரங்கள் கொண்ட "**நாச்சியார் திருமொழியையும்**" அருளிச்செய்தார். "மானிடவர்க்கு என்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என உறுதிகொண்டார்.

ஸ்ரீஆண்டாளின் பக்தியைக் கண்ட திருவரங்கத்து எம்பெருமான் இத்தலத்துக்கு எழுந்தருளி பங்குனி உத்திர நன்னாளில் ஸ்ரீஆண்டாளை திருமணம் செய்தருளி, இன்றும் இச்சன்னதியில் ஸ்ரீஆண்டாளுடனும், ஸ்ரீகருடாழ்வாருடனும், ஸ்ரீரெங்கமன்னார் என்கிற திருநாமத்தோடு சம ஆசனத்தில் திருக்கல்யாணக் கோலத்தில் சேவை சாதிக்கிறார்.

தாயார் ஸ்ரீஆண்டாளின் திருக்கல்யாண மஹோத்ஸவம் ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்திர முறைப்படி நிகழும் மங்களகரமான **ஸ்ரீமன்மத வருடம் பங்குனி மாதம் 02-ம் தேதி செவ்வாய்க்கிழமை 15.03.2016** அன்று **துவஜாரோஹணம் (கொடியேற்றம்)** தொடங்கி **ஸ்ரீமன்மத வருடம் பங்குனி மாதம் 14-ம் தேதி (27.03.2016)** அன்று **புஷ்பயாகம்** வரை நடைபெற உள்ளது **ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாணம் 23.03.2016** அன்று மிகவும் சிறப்பாக நடைபெற உள்ளது தினமும் ஆழ்வாரின் அருளிச் செயல்களான நாலாயிர திவ்ய ப்ரபந்த சேவா காலமும் நடைபெறுகிறது. பக்தர்கள் அனைவரும் இத்திருவிழாவில் கலந்து கொண்டு **ஸ்ரீஆண்டாள்-ஸ்ரீரெங்கமன்னார் திவ்ய தம்பதிகளின்** பேரருளைப்பெற்று இன்புமுற வேண்டுகின்றோம்.

**கி.ரவிச்சந்திரன்**
தக்கார்.

**சா. இராமராஜா**
செயல் அலுவலர்.

## உற்சவ விபரம்

| நாள்.கிழமை | புறப்பாடு (காலை) மண்டபம் | வாகனம் (இரவு) |
|---|---|---|
| மாசி 30<br>**13.03.2016**<br>**ஞாயிற்றுக்கிழமை** | காலை 8.30 மணிக்குமேல்<br>9.30 மணிக்குள் மேஷ லக்கினத்தில்<br>**அங்குரம் - தேங்காய் தொட்டு**<br>**நியமனம் பெறுதல்.** | மாலை 6.00 மணிக்கு<br>மேல் 6.30 மணிக்குள்<br>**சிம்ம லக்கினத்தில்**<br>**மிருத்ஸங்கிரஹணம்** |
| பங்குனி 01<br>**14.03.2016**<br>**திங்கட்கிழமை** | | **சேனை முதல்வர்**<br>**புறப்பாடு** |
| **1**-ம் திருநாள<br>பங்குனி 02<br>**15.03.2016**<br>**செவ்வாய்க்கிழமை** | சப்தமி திதியும், ரோகிணி நட்சத்திரமும்,<br>அமிர்தயோகமும் கூடிய சுபதினத்தில்<br>காலை 10.30 மணிக்கு மேல் 11.30<br>மணிக்குள் ரிஷப லக்கினத்தில<br>**த்வஜாரோஹணம்** (கொடியேற்றம்)<br>உபயம் திரு.ரா.பிரேம்சந்தர்-கஸ்தூரிபிரேம்சந்தர்<br>மேனேஜிங் டைரக்டர், அமரஜோதி<br>ஸ்பின்னிங் மில்ஸ் லிட் திருப்பூர்<br>& வைதேகி குருப் ஆப் கம்பெனிஸ் பெங்களூர்<br>**விஞ்சிமூர்க் குப்பனையங்கார் மண்டபம்** | **இரட்டைத்**<br>**தோளுக்கினியானில்**<br>**புறப்பாடு** |
| **2**-ம் திருநாள்<br>பங்குனி 03<br>**16.03.2016**<br>**புதன்கிழமை** | தந்தப் பல்லாக்கு வீதி<br>எழுந்தருளி நாச்சியார்பட்டி<br>நாயுடு சமூகம்<br>**ஆர்.கிருஷ்ணம்மாள்**<br>**குடும்பத்தினர் மண்டபம்** | **சந்திர பிரபை**<br>**சிம்ம வாகனம்** |
| **3**-ம் திருநாள்<br>பங்குனி 04<br>**17.03.2016**<br>**வியாழக்கிழமை** | தோளுக்கினியான்<br>தொட்டாச்சாரியார் மண்டபம் | **தங்கப்பரங்கி நாற்காலி**<br>**சிறிய திருவடி**<br>**அனுமார் வாகனம்,**<br>உபயம்:<br>மதுரா டிராவல்ஸ்<br>திரு.வி.அழகர்சாமி-சுப்புலெட்சுமி<br>ஸ்ரீவில்லிபுத்தூர். |
| **4**-ம் திருநாள்<br>பங்குனி 05<br>18.03.2016<br>வெள்ளிக்கிழமை | தோளுக்கினியான்<br>திருப்பதி பெரிய கேள்வி<br>**ஜீயர் சுவாமிகள் மண்டபம்** | **சேஷ வாகனம்**<br>**கோவர்த்தன பர்வத**<br>**வாகனம்** |
| **5**-ம் திருநாள்<br>பங்குனி 06<br>**19.03.2016**<br>**சனிக்கிழமை** | தோளுக்கினியான்<br>டாக்டர் **திரு.ராமசாமி மண்டபம்** | ஹம்ச வாகனம் பெரிய திருவடி<br>(கருட) வாகனம்<br>உபயம்:<br>**திரு.G.கோபால்ஆடிட்டர்,**<br>**T.நகர், சென்னை-17.** |
| **6**-ம் திருநாள்<br>பங்குனி 07<br>20.03.2016<br>ஞாயிற்றுக்கிழமை | தோளுக்கினியான்<br>கோட்டைப்புரம்<br>**செட்டியார்கள் வகையறா மண்டபம்** | **இரட்டைப் பரங்கி**<br>**நாற்காலி.** |

tnhrce.org

## உற்சவ விபரம்

| நாள்.கிழமை | புறப்பாடு (காலை) மண்டபம் | வாகனம் (இரவு) |
|---|---|---|
| **7**-ம் திருநாள்<br>பங்குனி 08<br>21.03.2016 திங்கட்கிழமை | **சாவியர் மண்டபம்** | **தோளுக்கினியான்<br>நெல் அளவை** |
| **8**-ம் திருநாள்<br>பங்குனி 09<br>**22.03.2016**<br>**செவ்வாய்க்கிழமை** | வீதி **எழுந்தருளி சாவியர்தோப்பு மண்டபம்** | ஸ்ரீஆண்டாள்-புஷ்ப பல்லாக்கு<br>ஸ்ரீரெங்கமன்னார்-குதிரை வாகனம்<br>**இரவு 7.30 மணிக்கு மேல் 8.00 மணிக்குள்**<br>கன்னியா லக்கினத்தில்<br>திருத்தேர் கடாக்ஷித்தல்<br>தங்க தோளுக்கினியான்<br>**உபயம்திருமதிசுதா கோபால்சாந்திநகர்,**<br>அடையாறு, சென்னை-20. |
| **9**-ம் திருநாள்<br>பங்குனி 10<br>**23.03.2016**<br>**புதன்கிழமை** | காலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள்<br>**ஸ்ரீரெங்கமன்னார்-ஸ்ரீஆண்டாள்<br>திருத்தேர் சேரதம் எழுந்தருளல்<br>காலை 7.00 மணி திருத்தேர் வடம்பிடித்தல்**<br>தேர் பராமரிப்பு மற்றும் அலங்காரம் உபயம்<br>காக்கிவாடன்பட்டி க.பெ.இராமச்சந்திரப்பநாயக்கர்<br>என்ற எத்திராஜுதாச வம்சா வழியினர் | |
| | **மண்டகப்படிதாரர்:**<br>தமிழ்நாடு ஸ்ரீ ராஜு மன்னரிக க்ஷத்திரிய (9 **ஊர்**)<br>கம்மவார் **மகாஜன சமூக வகையறா மண்டபம்**<br><br>காலை 10.00 மணி-ஸ்ரீஆண்டாள் கோவில்<br>மரியாதைகளுடன் கோட்டைத்தலைவாசல்<br>**ஊர் ஸ்ரீரேணுகா தேவி கோவிலுக்கு**<br>வந்து திருக்கல்யாணப் பட்டுப் புடவை,<br>வேஷ்டிகள், திருமாங்கல்யம் முதலியன பெறுதல். | **ஊஞ்சல் தண்டியல்<br>வாகனம்<br>யானை வாகனம்** |
| | மாலை 3.00 மணி, ஸ்ரீரெங்கமன்னார் வீதி புறப்பாடு,<br>ஸ்ரீபெரியாழ்வார் வேதபிரான் பட்டர் சமவாதன<br>தேங்காய் பெறுதல், பூர்ண கும்பத்துடன்<br>**ஸ்ரீ**பெரியாழ்வார் எழுந்தருளல்.<br>மாலை 4.00 மணி, **ஸ்ரீஆண்டாள்<br>அங்கமணிகளுடன் புறப்படுதல்**<br>மாலை 4.30 மணி முதல் 5.30<br>மணிக்குள் மாலை மாற்றுதல்<br><br>இரவு 6.30 மணிக்கு மேல் 7.20 மணிக்குள்<br>கன்னியா லக்கினத்தில்<br>**ஸ்ரீஆண்டாள்-ஸ்ரீரெங்கமன்னார்<br>திருக்கல்யாணம்**<br>(கல்யாண மனவுரை கன்னிகாதானம்)<br>இரவு 9.00மணிக்கு திருவாராதனம்,<br>மதுவாக்க கோஷ்டி, இரவு 11.00 மணிக்கு<br>**திருவாராதனம் தீர்த்த கோஷ்டி** | |

tnhrce.org

## உற்சவ விபரம்

| நாள்.கிழமை | புறப்பாடு (காலை) மண்டபம் | வாகனம் (இரவு) |
|---|---|---|
| 10-ம் திருநாள்<br>பங்குனி 11<br>24.03.2016<br>வியாழக்கிழமை | | அருள்மிகு ஸ்ரீஆண்டாள் திருக்கோயில் வெளிப்பிரகாரம்:<br>மாலை முத்துக்குறி ஊஞ்சல் சேவை<br>வேதபிரான் பட்டர் ஸ்தல புராணம் வாசித்தல், தீர்த்த கோஷ்டி, சப்தாவரண புறப்பாடு. |
| 11-ம் திருநாள்<br>பங்குனி 12<br>25.03.2016<br>வெள்ளிக்கிழமை | வாழைக்குளத் தெரு<br>தீர்த்தவாரி மண்டபம்<br>திருமதி G.R.சாந்திஸ்ரீனிவாசன்<br>12,பாங்க் ஆப் இந்தியா காலனி,<br>அசோக்நகர், சென்னை-83. | மாலை<br>ஆஸ்தானம் |
| 12-ம் திருநாள்<br>பங்குனி 13<br>26.03.2016<br>சனிக்கிழமை | செருக்கூர் அறக்கட்டளை<br>கல்யாண மண்டபம்<br>விடாயத்தி | |
| பங்குனி 14<br>27.03.2016<br>ஞாயிற்றுக்கிழமை | காலை உற்சவ சாந்தி திருமஞ்சனம்.<br>மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை<br>**புஷ்ப யாகம்**<br>இடம்: வெள்ளிக்கிழமை குறடு | ஸ்ரீஆண்டாள் சேவா டிரஸ்ட், ஸ்ரீவில்லிபுத்தூர் |

**23.03.2016 இரவு 7.00 மணிக்கு**
**திருக்கல்யாணத்தை முன்னிட்டு**
**பக்தர்களுக்கு சிறப்பு விருந்து வழங்கப்படும்.**

**சிறப்பு விருந்து உபயம்:**

**திரு ரா. பிரேம்சந்தர்- திருமதி கல்பஜாபிரேம்சந்தர்**
மேனேஜிங் டைரக்டர்,
அமர்ஜோதி ஸ்பின்னிங் மில்ஸ் லிட்,திருப்பூர் &
வைதேகி குரூப் ஆப் கம்பெனிஸ்,பெங்களூர்.

## பிளாட்டினம் அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி மற்றும் அதற்கு மேல் நன்கொடை வழங்குவோர்க்கு **"பிளாட்டினம் அட்டை"** வழங்கப்படும். அப்பிளாட்டினம் அட்டை மூலமாக நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் 10 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

## வைர அட்டைத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க அன்னதானத் திட்டத்திற்கு ரூ.7 லட்சம் நன்கொடை வழங்குவோர்க்கு **"வைர அட்டை"** வழங்கப்படும். அவ்வைர அட்டை மூலமாக, நன்கொடையாளர் குடும்பத்தார் தமிழகத்தின் அனைத்துத் திருக்கோயில்களிலும் 7 நபர்களுக்கு மிகாமல் 20 வருடங்களுக்கு சிறப்பு தரிசனம் செய்ய முன்னுரிமை வழங்கப்படும்.

tnhrce.org

## கட்டளைகள்

**நித்திய ஆராதனைக் கட்டளைகள்** : இத்திருக்கோயிலில் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நித்திய ஆராதனைக் கட்டளைக்காக முதலீடு செய்பவர்கள் விரும்பிய தினத்தன்று வருடத்தில் ஒரு நாள் அவர்களின் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

**நித்திய நெய்தீப கட்டளை** : இத்திருக்கோயிலில் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நெய்தீப கட்டளைக்காக முதலீடு செய்பவர்கள் விரும்பிய தினத்தில் வருடத்தில் ஒரு நாள் திருக்கோவில் கருவறையில் நெய் தீபம் ஏற்றி அவர்கள் பெயரில் அர்ச்சனை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

**பசுந்தீவனம் மற்றும் பசுக்கள் பராமரிப்புத்திட்டம்** : இத்திருக்கோயிலில் காணிக்கையாக வரப்பெறும் பசுக்கள் நல்ல முறையில் தீவனம் அளித்து பராமரித்து வரப்படுகின்றது. பசுக்களுக்கு தீவனம் அளித்து அவைகளை நல்லமுறையில் வளர்த்து பராமரிப்பது மகாலட்சுமி வழிபாட்டுக்குச் சமம் என புராணங்களில் சொல்லப்படுகிறது. எனவே பசுக்களுக்கு ஒருநாள் உணவாக ரூ.500/- திருக்கோவிலில் செலுத்தி மகாலட்சுமியின் அருளைப் பெற வேண்டுகிறோம். மேலும் ரூ. 5,000/- முதலீடு செய்பவர்களுக்கு ஆண்டிற்கு ஒரு நாள் அவர்கள் குறிப்பிடும் நாளில் பசுக்களுக்கு அன்னம் அளிக்கப்படும்.

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:**
செயல் அலுவலர்,
**அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில்**
ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125
விருதுநகர் மாவட்டம். தொலைபேசி எண் : 04563-260254
Website: www.srivilliputhurandaltemple.tnhrce.in
Email: eoandal@gmail.com

## அன்னதானத்திட்ட "நன்கொடை வேண்டுகோள்"

## அறிவிப்பு

### "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

### மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அன்னதானத் திட்டம் (100 நபர்கள்) இத்திருக்கோயிலில் 23.02.2002-ம் நாள் முதல் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் பங்கு பெறுபவர்கள் அன்னதானத் திட்டம் கட்டளை முதலீடாக ரூ. 25,000/-ம் மற்றும் முதலாம் ஆண்டு அன்னதான செலவுத் தொகையாக ரூ.2,500/-ம் ஆக மொத்தம் ரூ.27,500/- செலுத்தி இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம். அன்பர்கள் தங்களுடைய பிறந்த நாள், திருமண நாள், மனைவி, மக்கள் மற்றும் பெற்றோர்கள் பிறந்த நாள் போன்ற முக்கிய நாட்களிலும் மற்றும் அவரவர் விரும்பும் நாட்களிலும் அன்னதானம் செய்வதற்கு இத்திட்டத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.2,500/- செலுத்தி அன்னதானம் செய்து ஸ்ரீஆண்டாள்-ஸ்ரீரெங்கமன்னார் திருவருள் பெற்று இன்பமுற வேண்டுகிறோம்.

அன்னதான நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டப் பிரிவு 80(ஜி)ன்படி வரிவிலக்கு உண்டு.

tnhrce.org

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி:**
நிர்வாகி,
அன்னதானத் திட்டம்,
**அருள்மிகு நாச்சியார் (ஆண்டாள்) திருக்கோயில்**
ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.
விருதுநகர் மாவட்டம். தொலைபேசி எண் : 04563-260254
Website: www.srivilliputhurandaltemple.tnhrce.in
Email: eoandal@gmail.com

### தகவல் நிலையம்

பக்தர்களின் வசதிக்காக நம் திருக்கோவிலில் தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. திருகோவிலின் பூஜைகள், திருவிழாக்கள் போன்ற தகவல்களை அறிந்துகொள்ள தொலைபேசி எண் : 04563 - 260263 தொடர்பு கொள்ளவும்.

# ஸ்ரீஆண்டாள் அருளிய "நாச்சியார் திருமொழி"

## "ஆறாம் திருமொழி"

திருமணம் கைகூடவும், நன்மக்களை பெற்றிடவும்
பாராயணம் செய்ய வேண்டிய திருமொழி:

tnhrce.org

### வாரணமாயிரம்

வாரணமாயிரம் சூழவலஞ்செய்து
நாரணநம்பி நடக்கின்றானென்று எதிர்
பூரணபொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான் 1

நாளை வதுவை மணமென்றுநாளிட்டு
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ்
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீ! நான் 2

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான் 3

நால்திசைத்தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி
பூப்புனைகண்ணிப் புனிதனோடு என்தன்னை
காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன்தோழீ! நான் 4

கதிரொளிதீபம் கலசமுடனேந்தி
சதிரிளமங்கையர்தாம் வந்துஎதிர்கொள்ள
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன்தோழீ! நான். 5

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன்தோழீ! நான். 6

வாய்நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல்படுத்துப் பரிதிவைத்து
காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன்தோழீ! நான். 7

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடையதிருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்தோழீ நான். 8

வரிசிலை வாள்முகத்து என்னைமார்தாம் வந்திட்டு
எரிமுகம்பாரித்து என்னை முன்னேநிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என்கைவைத்துப்
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன்தோழீ நான். 9

குங்குமமப்பிக் குளிர்சாந்தமட்டித்து
மங்கலவீதி வலஞ்செய்துமணநீர்
அங்குஅவனோடும் உடன்சென்று அங்குஆனைமேல்
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்தோழீ நான் 10

பாராயணம் செய்வதால் கிடைக்கும் நன்மை:

ஆயனுக்காகத் தான்கண்ட கனாவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன் கோதைசொல்
தூயதமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப்பெற்று மகிழ்வரே. 11





# தங்க ரதம்

பக்தர்களின் பிரார்த்தினைக்கு இணங்க இத்திருக்கோவிலில் ஸ்ரீஆண்டாள்-ஸ்ரீரெங்கமன்னார் தங்க ரதம் இழுக்கப்படுகிறது. தங்க ரதம் இழுக்க கட்டணம் ரூ1,500/-. பக்தர்கள் கட்டணம் செலுத்தி தங்க ரதம் இழுத்து ஸ்ரீஆண்டாள்-ஸ்ரீரெங்கமன்னார் திவ்ய தம்பதிகளின் அருளைப் பெற்று வாழ்வில் எல்லா நன்மைகளையும் பெற வேண்டுகிறோம்.

ஸ்ரீஆண்டாள் ஸ்ரீரெங்கமன்னார் திருக்கல்யாண மேடை



அனைவரும் வருக! ஸ்ரீஆண்டாள் அருள் பெறுக!!

இவண்

| | |
|---|---|
| கி.ரவிச்சந்திரன் | சா. இராமராஜா |
| தக்கார். | செயல் அலுவலர். |